IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.39/2018
DEPOSITION OF WITNESS

ஆரம்ப நேரம்: 3.20 p.m.

<u>வா.சா. 1 சாட்சி சத்தியவிதுரன் த.பெ.ராமதாஸ்</u>

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Additioanl District Munsif on 17.11.2025 in accordance with the provisions of Act XX141.**

<u>2 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> :

1. நான் 2ம்வாதி என்றால் சரிதான். வழக்குச் சொத்தில் A அட்டவணை 1ம்வாதிக்கும், Bஅட்டவணை சொத்துக்கள் எனக்கும் பாத்தியப்பட்டது என்று கூறுகிறோம் என்றால் சரிதான். நானும், 1ம்வாதியும் தனித்தனி ஆவணங்கள் மூலமாகத்தான் உரிமை கோருகிறோம் என்றால் சரிதான். 1ம்வாதி எனது அக்கா ஆவார்.

2.எங்களதுஉறவுமுறையை எனது பிராதிலோ, நிரூபணவாக்குமூலத்திலோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனது சாட்சியமானது எனக்கு மட்டுமா என்றால் எனது அக்காவுக்கும் சேர்த்துதான் வழங்குகிறேன். நான் வழக்கின் ஆவணங்கள் மற்றும் பிரதிவாதிகள் தரப்பு எதிர்வாதத்தையும் படித்து பார்த்துதான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான்.

3. வழக்குச் சொத்தின் சர்வே எண் 4/2ன் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் தெரியாது. வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணங்கள் ஏற்பட்ட காலத்தில் நான் இளவராக இருந்தேன் என்றால் சரிதான். வழக்குச் சொத்தின் மூலஉரிமைகள் மேற்படி காலத்தில் எனக்கு தெரியாது என்றால் சரிதான். பின்னர் கிரையம் கொடுத்த

மூலஉரிமையாளர்கள் பற்றி தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன்.

4. சர்வே எண் 4/2ல் A அட்டவணை மற்றும் Bஅட்டவணைச் சொத்துக்கள் ஆதியில் யாருக்கு பாத்தியம் என்றால் பெருமாள் நாயக்கர் என்பவருக்கு பாத்தியம் ஆகும். மேற்படி பெருமாள் நாயக்கருக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் பூர்வீக பாத்தியம் ஆகும். மேற்படி பெருமாள் நாயக்கர் பெயரில் பட்டா ஏற்பட்டது என்றால் சரிதான்.

5. மேற்படி பட்டாவை நான் பார்த்துள்ளேனா, நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பெருமாள் நாயக்கருக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் எனக்கு தெரியாது. கிரையகாலத்தில் சொத்தின் உரிமையை எனது தந்தையும், 1ம்வாதியும் விசாரித்தார்கள். பெருமாள் நாயக்கர் பொன்னுத்தாய் என்பவருக்கு கிரையம் கொடுத்தார். மேற்படி பொன்னுத்தாய் எழுதிக்கொடுத்த பத்திரம்தான் வா.சா.ஆ.3 என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் எவ்வளவு செண்டு எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் 45 செண்டு ஆகும்.

6. வா.சா.ஆ.3 ஆவணத்தில் என்ன உரிமையின் அடிப்படையில் ஆவணங்களை எழுதிக்கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. பெருமாள் நாயக்கருக்கு பாத்தியப்பட்ட ஆவணத்தை பார்த்தால்தான் அவர் பொன்னுத்தாய்க்கு எழுதிக்கொடுத்த ஆவணம் சரியா என்று தெரியவரும் என்றால் சரிதான்.

7. நான் கிரையம் வாங்கிய பிறகு வருவாய்துறை ஆவணங்களில் பெருமாள் நாயக்கர் பெயரில் பட்டா இருந்ததா என்பதை பார்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தேனா என்றால் எடுத்தோம் ஆனால் கிடைக்கவில்லை.

வழக்குச் சொத்திற்கு கிரைய காலத்தில் வில்லங்கச் சான்றிதழ் பார்த்தேனா என்றால் பார்த்துள்ளோம்.

8. மேற்படி வில்லங்கச் சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது கைவசம் உள்ளதா என்றால் இல்லை. வில்லங்கச் சான்றிதழில் வேறு ஏதேனும் வில்லங்கம் காண்பிக்கப்பட்டிருந்ததா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 முதல்4 ஆவணங்களில் சர்வே எண் 4/2ல் 1 ஏக்கர் 24 செண்டு என்று மொத்த விஸ்தீரணமாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

9. மேற்படி 1 ஏக்கர் 24 செண்டு மேல்புறம் 45 செண்டு கிரையம் கொடுத்துள்ளதாக வா.சா.ஆ.3 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 1 ஏக்கர் 24 செண்டும் பெருமாள் நாயக்கருக்கு முழுமையான பாத்தியமா என்றால் 45 செண்டு மட்டும் பாத்தியம் ஆகும். வா.சா.ஆ.3 ஆவணத்தில் கிழக்கு மாலாக என்ன குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது.

10. சர்வே எண் 4/2ல் 1 ஏக்கர் 24 செண்டோ அல்லது 45 செண்டோ பெருமாள் நாயக்கருக்கு எந்தக்காலத்திலும் பாத்தியப்பட்டது அல்ல என்றால் சரியல்ல. அதனால்தான் அவர் பெயரில் எந்த ஆவணங்களையும் தாக்கல் செய்ய இயலவில்லை என்றால் சரியல்ல. பெருமாள் நாயக்கருக்கு எந்த உரிமையும் இல்லாத நிலையில் அவர் எழுதிக்கொடுத்த வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 கிரையப்பத்திரம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

11. பொன்னுத்தாய் வா.சா.ஆ.4 கிரையப்பத்திரம் மூலமாக 38 செண்டுதான் இராஜா என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால்

சரிதான். மீதமுள்ள 7 செண்டு ரோட்டிற்காக எடுக்கப்பட்டுள்ளது. மேற்படி ரோடு வழக்குச் சொத்திற்கு தெற்கே உள்ளது என்றால் சரிதான். வழக்குச் சொத்தின் தெற்கு மாலாக பொன்னுத்தாய் கிரையம் பெற்ற கிரையச்சொத்திலும் சேடபட்டி ரோடுதான் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

12. பொன்னுத்தாய் கிரையம் பெற்ற 45 செண்டில் 7 செண்டு ரோட்டிற்காக எடுக்கப்பட்டது என்று தவறாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. எனது பெயரிலும், 1ம்வாதி பெயரிலும் ஏற்பட்ட கிரையத்தின் அடிப்படையில் வா.சா.ஆ.7, வா.சா.ஆ.9 சிட்டா தாக்கல் செய்துள்ளேன் அது சம்மந்தமாக விசாரணை நடைபெற்றதா என்றால் விசாரித்துதான் வழங்கினார்கள். 1ம்வாதி பெயரில் பட்டா உள்ளது எனது பெயரில் பட்டா இல்லை.

13. வா.சா.ஆ.6,8,10 பொன்னுத்தாய் பெயரில் ஏற்பட்ட அடங்கல் எவ்வளவு சொத்திற்கு என்றால் 45 செண்டு ஆகும். 45 செண்டிற்கு பொன்னுத்தாய் பெயரில் பட்டா ஏற்பட்டதாக கூறுவது தவறானது என்றால் சரியல்ல. சர்வே எண் 4/2 ஆதியில் பைமாஸ் எண் 27ல் கட்டுப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. பைமாஸ் எண் 27 சர்வே எண் 4/2க்கு உட்பட்டது என்றாலும், அது மொத்தம் 73 செண்டுக்குரியது என்றாலும் எனக்கு தெரியாது.

14. மேற்படி பைமாஸ் எண் 27க்கு கிழக்கே பைமாஸ் எண் 12ல் 99 செண்டு கட்டுப்பட்டுள்ளது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி இரண்டு பைமாஸ் எண்களில் கட்டுப்பட்ட மொத்த விஸ்தீரணம் 1 ஏக்கர் 72 செண்டு ஆரம்பத்தில் தனிக்கொடி நாயுடு என்பவருக்கு

பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்படி தனிக்கொடி நாயுடு 1 ஏக்கர் 72 செண்டினை 27.3.1940ல் முப்பிடி நாயக்கர் என்பவருக்கு பதிவுக் கிரையப்பத்திரம் மூலம் கிரையம் கொடுத்துள்ளார் என்றால் 86 செண்டு மட்டுமே கிரையம் கொடுத்துள்ளார்.

15. மேற்படி 27.3.1940 தேதியிட்ட கிரைய ஆவணத்தை பார்த்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி கிரையப்பத்திரத்தை பார்த்தால் எவ்வளவு செண்டு கட்டுப்பட்டுள்ளது என்ற விபரம் தெரியும் என்றால் சரிதான். அந்த ஆவணத்தை தாக்கல் செய்யமுடியும் என்றால் சரிதான். மேற்படி 27.3.1940 தேதியிட்ட ஆவணத்தில் 86 செண்டு கிரையம் கொடுக்கவில்லை என்றாலும் 1 ஏக்கர் 72 செண்டு கிரையம் கொடுக்கப்பட்டது என்றாலும் சரியல்ல. முப்பிடி நாயுடு என்பவர் பெயரில் 1978ம் ஆண்டுக்கான அடங்கல் கணக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

16. மேற்படி முப்பிடி நாயக்கருக்கு பாம்பக்கம்மாள் என்ற ஒரு சகோதரி இருந்தார் என்றால் சரிதான். மேற்படி இருவரும் 1ம்பிரதிவாதிக்கு சர்வே எண் 4/2ல் 1 ஏக்கர் 24 செண்டினை 27.2.1980ல் கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. கிரையப்பத்திரம் ஏற்பட்டது ஆனால் அது தவறானது ஆகும். மேற்படி கிரையப்பத்திரத்தை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்தேன்.1ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட கிரையப்பத்திரத்தில் கிழக்கு மாலாக பெருமாள் நாயக்கர் பெயர் குறிப்பிட்டுள்ளதால் அது 86 செண்டிற்கு மட்டுமே ஏற்படவேண்டிய கிரையம் ஆனால் 1 ஏக்கர் 24 செண்டிற்கு ஏற்பட்டுள்ளதால் அது தவறானதாகும்.

17. மேற்படி தவறு எனக்கு எப்போது தெரியவந்தது என்றால் வழக்கு தாக்கல் செய்த காலத்தில் எனக்கு தெரிய வந்தது. மேற்படி தவறை சுட்டிக்காட்டி 1ம்பிரதிவாதி பெயரில் கிரையம் எழுதிக்கொடுத்தவர் பெயருக்கோ, எழுதி வாங்கியவர் பெயருக்கோ வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் அனுப்பவில்லை வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

18. இவ்வழக்கில் 1ம்பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட கிரையத்தை பற்றி கூறியுள்ளோமா என்றால் கூறியுள்ளோம். 1ம்பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட கிரையம் சட்டப்படி செல்லாது என்று பரிகாரம் கேட்டுள்ளேனா என்றால் கேட்கவில்லை. ஆனால் அனுபவத்திற்கு இடையூறு ஏற்பட்டதால் மட்டுமே அதுகுறித்து பரிகாரம் கேட்டுள்ளேன்.

19. அனுபவத்திற்கு இடையூறு ஏற்பட்டது என்று வழக்கிற்காக தவறாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. வழக்குச் சொத்தில் A அட்டவணைச்சொத்து எனக்கும், B அட்டவணைச் சொத்து 1ம்வாதிக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரிதான். வருவாய்துறை ஆவணங்களில் 1ம்பிரதிவாதி பெயரில் சர்வே எண் 4/2ல் கண்ட 1 ஏக்கர் 24 செண்டிற்கு பட்டா பெயர் மாற்றம் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

20. 1ம்பிரதிவாதி அவர் கிரையம் பெற்ற காலமுதல் 4/2ல் உள்ள 1 ஏக்கர் 24 செண்டினை கிரையம் பெற்று அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. 1ம்பிரதிவாதி பெயரில் அடங்கல் கணக்கில் பெயர் ஏற்பட்டுள்ளதை தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. வழக்குச் சொத்தும், 1 ஏக்கர் 24 செண்டும் 1ம்பிரதிவாதிக்கு தனித்து

பாத்தியப்பட்டசொத்து என்றாலும் அது அவரது தனித்த பாத்தியத்தில் இருந்து வந்தது என்றாலும் சரியல்ல.

21. 1ம் பிரதிவாதி பெயரில் பட்டா ஏற்பட்ட விபரம் இருந்தபோது அவரை விசாரணை செய்யாமல் எனது முன் கிரையதாரர் இராஜா என்பவருக்கு பட்டா ஏற்பட்டது என்றால் சரியல்ல. 1ம்பிரதிவாதி தங்கேஸ்வரன் உசிலம்பட்டி வருவாய்கோட்டாட்சியரிடம் மனு கொடுத்து விசாரணை நடைபெற்றது என்றால் எனக்கு தெரியாது.

22. 1ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையின் படித்து பார்த்த பின் அதில் கூறியுள்ள விபரங்கள் குறித்து எனது கிரையதாரர் இராஜா என்பவரிடம் விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். பட்டாமாறுதல் விசாரணையில் 1ம்வாதிக்கு அழைப்பாணை வந்ததா என்றால் வந்தது. அதனை 1ம்வாதி எதிர் வாதம் செய்தாரா என்றால் தெரியாது. மேற்படி மனுவில் 1ம்வாதி எதிர்வாதம் செய்தார் என்றாலும், அதில் உத்தரவு பிறப்பிக்கும் நிலையில் நாங்கள் இவ்வழக்கினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

23. இவ்வழக்கிற்கு பின்னிட்டு வழக்கு நிலுவையில் இருப்பதாக கூறி கோட்டாட்சியர் விசாரணையில் குறிப்பாணை தாக்கல் செய்தேன் என்றால் தெரியாது. மேற்படி குறிப்பாணை தாக்கல் செய்ததன் அடிப்படையில்தான் கோட்டாட்சியர் விசாரணை நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. 1ம்பிரதிவாதியின் பட்டாபெயர் மாற்றத்தை தடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில்தான் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

24. தாவாச் சொத்துக்களை நாங்கள் கிரையம் வாங்கும்போது வில்லங்கச் சான்றிதழை பார்வையிட்டதாக கூறும் நிலையில் அதில்

1ம்பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட கிரையம் தெரிவிக்கப்பட்டிருக்கும் என்றும், அதனால்தான் வில்லங்கச் சான்றிதழை தாக்கல் செய்யாமல் உள்ளோம் என்றால் சரியல்ல. 1ம்பிரதிவாதிக்கு தாவாச் சொத்துக்கும், அதனுடன் சேர்ந்த கூடுதல் சொத்திற்கும் முறையான உரிமையின் அடிப்படையில் எங்களது கிரையத்திற்கு முன்பே கிரைய ஆவணம் ஏற்பட்டுள்ளதால் விளம்புகை பரிகாரம் கோராமல் தாக்கல் செய்த இவ்வழக்கு செல்லாது என்றால் சரியல்ல.

25. வழக்குச் சொத்தின் Bஅட்டவணையில் கிழக்கு மாலாக பிரதிவாதி தங்கேஸ்வரனை குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி விபரமானது 1ம்பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட கிரையத்தின் அடிப்படையில்தான் நான்குமால் விபரத்தை கூறியுள்ளேன் என்றால் அவரது பெயரில் ஏற்பட்ட தவறான விஸ்தீரணத்தின் அடிப்படையில் கூறியுள்ளேன்.

26. வழக்குச் சொத்தும், அதனுடன் சேர்ந்த 1 ஏக்கர் 24 செண்டும் தற்போது வரை பிரதிவாதிகள் தான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. எனது பெயரிலோ, 1ம்வாதி பெயரிலோ வழக்குச் சொத்திற்கு இரசீது தாக்கல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்யவில்லை. வழக்கு காலத்தில் 1ம்பிரதிவாதி எப்போது எனது அனுபவத்திற்கு இடையூறு ஏற்படுத்தினார் என்றால் 2017ம் வருடம் கடைசியில் ஏற்படுத்தினார். அது சம்மந்தமாக புகார் அளித்தோமா என்றால் இல்லை, வழக்கு தாக்கல் செய்தோம். மேற்படி இடையூறு செய்ததாக தவறாக கூறுகிறேன் என்றாலும், வழக்குச் சொத்தின் அனுபவத்தில் நாங்கள் எப்போதும் இருந்ததில்லை என்றால் சரியல்ல.

27. எனக்கு தெரியவந்த விபரங்களை மறைத்து தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளதால் இவ்வழக்கு செல்லாது என்றால் சரியல்ல. 1 ஏக்கர் 24 செண்டு எவ்வித பிரிவினையும் இன்றி ஒரே அமைப்பாக இருந்தது என்றால் சரிதான். நாங்கள் ஏற்படுத்திய பட்டா மாறுதல் உட்பிரிவு நடவடிக்கை தவறானது என்றால் சரியல்ல. எனது வழக்கு தாக்கல் செய்த விபரம் தவறானது தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

முடிவடையும் நேரம்:3.20 p.m.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை
தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி
அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்
கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.11.17 17:39:38 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.